THE HON. SRI C. SUBRAMANIAM : அவ்வப்போதுதான் திட்டத்தில் தீர்மானிக்கப்படும். இப்பொழுது கொடுத்திருப்பது இந்த திட்டத்தின் பிரகாரம் கொடுக்கப்பட்டிருப்பது. தொடர்ந்து அது கிடைக்குமா என்ற பிரச்னையைப்பற்றி பரிசீலனை செய்து அவ்வப்போது முடிவு செய்யப் பட்டு ஒதுக்கப்படும்.

Wool processing factory

* 102 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any wool processing factory has been set up by the Government in the State; and

(*b*) if so, the amount spent thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) One is being set up, Sir.

(*b*) Rs. 1,92,578·23.

SRI A. A. RASHEED : Sir, is it a fact that this is a joint venture of three States?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is set up by the co-operation of Andhra and Mysore.

SRI N. K. PALANISAMI : ஒவ்வொரு மாகாணமும் எவ்வளவு மூலதனம் போட்டிருக்கிறது என்பதைக் கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போடப்பட்ட மூல தனத்தில் சரி பாதியாக இரண்டு ராஜ்யங்களும் பங்கிட்டுக்கொள்ளுகின்றன.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த கம்பளி தொழிற்சாலைகளில் வேலை இல்லாமல் இருக்கிற கைத்தறி நெசவு தொழிலாளர்களை சேர்த்துக் கொள்வதற்கு சர்க்கார் சிபாரிசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த கைத்தறி நெசவாளர்களை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அந்தத் தொழிலில் எடுத்துக்கொள்வதாக இருந்தால் கம்பளியில் வேலைசெய்யக் கூடிய பழக்க வழக்கம் உள்ளவர்களைத்தான் எடுத்துக்கொள்ளுவார்கள்.

New girls' schools

* 103 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state the amount of grant received from the Government of India for the opening of girls' schools in the State for the years 1956 and 1957?

THE HON. SRI C. SUBRAMANIAM : Grants are not received from the Government of India exclusively for the opening of girls schools. Grants are given by the Centre for—

(1) the additional enrolment of pupils (both boys and girls) in elementary schools; and

(2) the opening of additional classes in high schools.